**விவிலியப் பணிக்குழு செய்திகள்**

**11.08.2024** அன்று பொதுநிலையினருக்கான ஓர் ஆண்டு சான்றிதழ் விவிலியப் பட்டயப் பயிற்சியின் (2024–2025) இரண்டாம் மாதத்திற்கான வகுப்பு காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது. வகுப்பினை விவிலிய பேராசியர் அருள்தந்தை ரெய்மண்ட் ஜோசப் அவர்கள் "தொடக்க நூலுக்கு" விளக்கமளித்தார்கள். அதனைத் தொடர்ந்து 4 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இப்பயிற்சி வகுப்பில் 106 நபர்கள் பங்குபெற்றார்கள்.

**11.08.2024** அன்று **“360 நாட்களில் விவிலியம் வாசிப்போம் 2024”** இணைந்து விவிலியம் வாசிப்பவர்களுக்கான ஏழாவது தேர்வு நடைபெற்றது. இதில் தமிழகத்தின் அனைத்து மறைமாவட்டங்களிலிருந்தும் வெளி மாநிலம் மற்றும் வெளி நாடுகளிலிருந்தும் 800 நபர்கள் கூகுள் படிவத்தின் வழியாக தேர்வில் பங்கேற்றனர். 259 நபர்கள் 100/100 மதிப்பெண்கள் பெற்றார்கள். சென்னை–மயிலை உயர்மறைமாவட்டத்திலிருந்து மட்டும் 86 பங்குகளிலிருந்து 326 நபர்கள் தேர்வில் பங்கேற்றார்கள். 46 பங்குகளைச் சார்ந்த 93 நபர்கள் 100/100 மதிப்பெண்கள் பெற்றார்கள். இவர்களுக்கு 13.10.2024 அன்று 8வது தேர்வு நடைபெறவுள்ளது.

**11.08.2024** அன்று **“Read Bible in 2024”** இணைந்து ஆங்கிலத்தில் ESV-CE (English Standard Version-Catholic Edition) திருவிவிலியத்தை முழுமையாக வாசிப்பவர்களுக்கான ஐந்தாம் தேர்வு கூகுள் படிவத்தின் வழியாக நடைபெற்றது. இதில் 92 நபர்கள் தேர்வில் பங்கேற்றார்கள். இவர்களுக்கு 11.08.2024 அன்று 6வது தேர்வு நடைபெறவுள்ளது.

**அறிவிப்புகள்:**

**<u>1) செப்டம்பர் விவிலிய மாதம்</u>**

***“என் வார்த்தையில் நிலைத்திருங்கள் (யோவா 8: 31)”*** என்ற தலைப்பில் இவ்வாண்டு விவிலிய மாதம் / வாரம் / ஞாயிறு திருவழிபாட்டினை சிறப்பிக்க திண்டிவனம் முப்பணி நிலையத்திலிருந்து பெறபெற்ற விவிலிய ஞாயிறுக்கான சுவரொட்டி, திருவழிபாட்டுக் கையேடு ஆகியவற்றை தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. விவிலிய மாதத்திற்கான கையேட்டில் விவிலியக் கொண்டாட்டத்திற்கான அனைத்து செயல்திட்டங்களும் விரிவாக அளிக்கப்பட்டுள்ளது, அவற்றை பயன்படுத்திகொள்ளவும்.

தங்கள் பகுதியில் இடம்பெறும் விவிலிய மாதம் / வாரம் / ஞாயிறு சிறப்பு நிகழ்வுகளின் புகைப்படங்கள் மற்றும் செய்திகளை எமது மின்அஞ்சல் biblecommissionchennai@gmail.com மற்றும் வாட்சப் (9840875239) வழியாக பகிர்ந்துகொள்ளலாம்.

***<u>விவிலிய வினா–விடை போட்டி 2024</u>***

நமது இறைமக்களை இறைவார்த்தையை வாசிக்கத்தூண்டும் நோக்கில் உயர்மறைமாவட்ட அளவில் இரண்டு தேதிகளில் இரண்டு இடங்களில் **விவிலிய வினா–விடை போட்டி–2024** நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. போட்டிக்கான விவிலிய நூல்கள் – இறைவாக்கினர் நூல்கள்: **செக்கரியா, ஓசேயா;** நற்செய்தி நூல்கள்: **மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் மற்றும் எபேசியர் திருமுகம் (திருவிவிலியம் பொதுமொழிபெயர்ப்பு)** இந்த நூல்களிலிருந்து இரண்டு மையங்களுக்கும் தனித் தனிக் கேள்விகள் இவ்வாண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 350 (175 + 175) கேள்விகள் அனைத்து அருள்தந்தையர்களுக்கும் தபாலில் மற்றும் வாட்சப் வழியாக பகிர்ந்துகொள்ளப்பட்டுள்ளது. போட்டியில் கலந்துக்கொள்பவர்கள் தாங்கள் தேர்வு செய்யும் மையத்தின் கேள்விக்கான பதிலை மட்டும் கண்டுபிடித்து தங்களை போட்டிக்குத் தயார்படுத்திக்கொள்ளவும். தேர்வு நாளன்று அதிலிருந்து 100 கேள்விகள் மட்டுமே கொடுக்கப்படும்.

**போட்டியில் பங்கேற்போர் கவனத்திற்கு:–**

- **போட்டி நடைபெறும் தேதிகள் மற்றும் இடங்கள் :**
  1) 22.09.2024 – புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர்.
  2) 29.09.2024 – புனித இரபேல் மேல்நிலைப் பள்ளி, சாந்தோம்.
- **போட்டி நடைபெறும் நேரம் :** காலை 10.30 மணி முதல் 12.30 மணி வரை. ***(போட்டியாளர்கள் 1 மணிநேரம் முன்னதாகவே வந்து தங்களின் தேர்வு அறையையும் இருக்கையையும் தெரிந்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்).***
- **போட்டிக்கான கேள்விகள்** : 100 கேள்விகள் (எழுத்துத் தேர்வு)
- **பதிவுக் கட்டணம்** : **ரூ.130/-** (நபர் ஒருவருக்கு)
- **பதிவு செய்யும் முறை** : **இணையவழியில் மட்டும் பதிவுகள் ஏற்கப்படும். (நேரடி பதிவுகள் இவ்வருடம் நடைபெறாது) ஆகவே முதலில்**

**பதிவாகும் 1000 பதிவுகள் மட்டுமே அனுமதிக்கப்படும்.**

- **பதிவு செய்வதற்கான இணைப்பு :**

  https://docs.google.com/forms/d/e/1FAIpQLSdb1neA1xDbDDAzj4JFl6RNH5BL8EU8WEC9U_GA9wyaqDUy6Q/viewform

  **or SCAN**

  ***(இணைப்பில் (Link) கேட்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் முழுமையாக பதிவுசெய்திருந்தால் மட்டுமே போட்டியில் பங்கேற்க முடியும்.)***

- **பதிவு செய்ய கடைசி தேதி : 15.09.2022 மாலை 4.00 மணிவரை.**
- **பரிசு விவரம் : மதிப்பெண்கள் அடிப்படையில் அனைவருக்கும் பரிசு.**

1. மறைமாவட்ட அளவில் முதல் மதிப்பெண், இரண்டாம் மதிப்பெண், மூன்றாம் மதிப்பெண் எடுக்கும் அனைவருக்கும் பரிசு. (புகைப்படத்துடன் கூடிய சீல்டும் சான்றிதழும் வழங்கப்படும்)
2. மறைவட்ட அளவில் முதல் மதிப்பெண், இரண்டாம் மதிப்பெண், மூன்றாம் மதிப்பெண் எடுக்கும் அனைவருக்கும் பரிசு. (புகைப்படத்துடன் கூடிய சீல்டும், சான்றிதழும் வழங்கப்படும்)
3. பங்கு அளவில் முதல் மதிப்பெண், இரண்டாம் மதிப்பெண், மூன்றாம் மதிப்பெண் எடுக்கும் அனைவருக்கும் பரிசு.
4. 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் சிறப்பு பரிசு.
5. 15 வயதுக்கு குறைவான சிறுவர்களுக்கும் சிறப்பு பரிசு.
6. **போட்டிக்கு அதிக எண்ணிக்கையில் பங்கேற்கச் செய்யும் பங்கு தந்தையர்களுக்கும் சிறப்பு பரிசு.**
7. போட்டியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் புகைப்படத்துடன்கூடிய சான்றிதழ் வழங்கப்படும்.

**குறிப்பு:**

- போட்டியில் பங்கேற்போர் முன்னதாகவே (15.09.2024) இணையத்தின் வழியாக பதிவு செய்திருத்தல் வேண்டும்.
- தேர்வு அட்டை (writing pad) மற்றும் எழுதுகோல் கண்டிப்பாக கொண்டு வரவேண்டும்.
- பதிவுசெய்த நாளிலிருந்து போட்டி நடைபெறும் நாட்கள் வரை போட்டியாளர்களுக்கு என தனியாக வாட்சப் குழு உருவாக்கப்பட்டு வழிநடத்தப்படுவார்கள்.
- வெற்றியாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் இருப்பின் சமமாக பரிசளிக்கப்படும்.
- பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை விவிலியப் பணிக்குழுவைச் சார்ந்தது.

- பங்கு தந்தையர்கள் தங்கள் பங்கில் தொடர் அறிவிப்புகள் செய்து இறைமக்கள் விவிலியத்தை வாசிக்க ஊக்கப்படுத்தி போட்டியில் பங்கேற்க உதவும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**2) விவிலியப் பணிக்குழுவின் கண்காட்சி படங்களைத்** தங்கள் பங்குதளங்களில் பயன்படுத்த விரும்புபவர்கள் விவிலியப் பணிக்குழுவின் பணிகளுக்கு உதவியாக கட்டணம் செலுத்தி பயன்படுத்திக்கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். முன்னதாக முன்பதிவுச் செய்துகொள்ள விவிலியப் பணிக்குழு அலுவலகத்திற்கு நேரில் அனுகவும்.

**3)** விவிலிய மாதத்தில் திருவிவிலியம் மற்றும் இறைவார்த்தையை மையப்படுத்திய புதிய தயாரிப்புகள் விவிலியப் பணிக்குழு அலுவலகத்தில் கிடைக்கும்.

**4) "திருவழிபாட்டின் வழிகாட்டி 2024–2025"** திருப்பலி வாசகக் குறிப்புகள் அடங்கிய புத்தகம் **"திருவருகைக் காலம் முதல் கிறிஸ்து அரசர் பெருவிழா வரை"** தயாரிக்கப்பட்டு உள்ளது. தங்கள் பங்குகளுக்கு அதிக எண்ணிக்கையில் வாங்கி பயன்படுத்த விரும்புபவர்கள் விவிலியப் பணிக்குழுவிற்கு செப்டம்பர் இறுதிக்குள் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**செயலர்**

**அருள்தந்தை ஜோ. ச. எட்வர்ட் அந்தோணி ராஜி**

**விவிலியப் பணிக்குழு**